1996 பிப்ரவரி 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

3--

கிராமச் சாவடிகள் புதுப்பித்தல்

*36629--**திரு என்.ஆர் சிவபதி:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வருவாய் கிராமங்களுக்கு கிராமச் சாவடிகள் புதுப்பித்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், நத்தம், காடுவெட்டி, அலகரை, மணமேடு, எம். புத்தூர், நாகைய நல்லூர் ஆகிய வருவாய் கிராமங்களின் கிராமச் சாவடிகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பழுதடைந்த கிராமச்சாவடிகளைப் பழுது பார்ப்பதற்காக அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமச் சாவடிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள், கிராம அலுவலர்கள் ஆகியோர் இன்று அமர்ந்து, வரி வசூல் செய்யும் இடமாகவும், அதேநேரத்தில் விசாரணை செய்யும் இடமாகவும் இருப்பதால், எல்லாக் கிராமங்களிலும் இன்று நல்ல நிலையில் இருந்தாலும், பழுதடைந்த ஒரு சில வருவாய் கிராமங்களில் இருக்கும் கிராமச் சாவடிகளை அரசு புதுப்பித்துத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் நீண்ட பல காலமாக சாவடிகள் இருந்திருக்கின்றன. சில சாவடிகள் மிகவும் பழுதடைந்து, அவை செப்பனிட முடியாத நிலையில் உள்ளன. சில சாவடிகள் செப்பனிடும் நிலையில் இருக்கின்றன. சில சாவடிகள் நல்ல நிலையில் இருக்கின்றன. செப்பனிடும் நிலையில் உள்ள சாவடிகளையெல்லாம் பழுது பார்ப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னார்கள். தொட்டியம் ஒன்றியத்தில், நத்தம், காடுவெட்டி, அலகரை, மணமேடு, எம்.புத்தூர், நாகைய நல்லூர் ஆகிய கிராமங்களில் கிராமச் சாவடிகள் பழுதடைந்துள்ளன. இவை வருவாய் கிராமங்களில் அதிக மக்கள் தொகை இருக்கிற கிராமங்கள் ஆகவும், அதே நேரத்தில் அந்தந்தப் பகுதியில் முக்கிய வருவாய் கிராமங்களாகவும் இருப்பதால், அந்தக் கிராமச் சாவடிகளை எப்போது புதுப்பிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு ஐயா அவர்கள் அறிவிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நத்தம் சாவடிக்கு 75 ஆயிரம் ரூபாய், காடுவெட்டி கிராமச் சாவடிக்கு 75 ஆயிரம் ரூபாய், அலகரை, மணமேடு கிராமச் சாவடிக்களுக்கு 80 ஆயிரம் ரூபாய், எம். புத்தூர் கிராமச் சாவடிக்கு 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய், நாகையநல்லூர் கிராமச் சாவடிக்கு 50 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பீடு போட்டு, வேலை செய்ய வேண்டும் என்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. வி.பி.ஆர். ரமேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

4--

அரசு பொது மருத்துவமனையை நவீனமாக்குதல்

*38705--**திரு. வி.பி.ஆர். ரமேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையை நவீன மருத்துவ வசதி கொண்ட மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?